# இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

## தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - ஏழு - ___________

நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** $10 \times 1 = 10$

1. பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற்பெயர் எது?
   அ) ஊறு ஆ) நடு இ) விழு ஈ) எழுதல்
2. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது _____________
   அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்
3. கற்றனைத்து + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________
   அ) கற்றனைத்தூறும் ஆ) கற்றனைதூறும்
   இ) கற்றனைத்தீறும் ஈ) கற்றனைத்தோறும்
4. கல்வியைப் போல் _____________ செல்வம் வேறில்லை.
   அ) விலையில்லாத ஆ) கேடில்லாத இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத
5. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் _____________
   அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம்
   இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம்
6. கல்வியில்லாத நாடு _____________ வீடு.
   அ) வாசலில்லாத ஆ) பொருளில்லாத இ) கதவில்லாத ஈ) விளக்கில்லாத
7. பொருந்தாத ஓசை உடைய சொல் _____________
   அ) பாய்கையால் ஆ) மேன்மையால் இ) திரும்புகையில் ஈ) அடிக்கையால்
8. பெயர்ப்பகுபதம் _____________ வகைப்படும்.
   அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு
9. மிளகாய் வற்றலின் _____________ தும்மலை வரவழைக்கும்.
   அ) நெடி ஆ) காட்சி இ) மணம் ஈ) தவறில்லாத
10. மக்கள் _____________ ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.
    அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் ஈ) வங்கத்தில்

**II. பொருத்துக.** $5 \times 1 = 5$

11. கற்கும் முறை - செயல்
12. உயிர்க்குக் கண்கள் - காகம்
13. விழுச்செல்வம் - பிழையில்லாமல் கற்றல்
14. எண்ணித் துணிக - எண்ணும் எழுத்தும்
15. கரவா கரைந்துண்ணும் - கல்வி

**III. மனப்பாடப்பாடல்.** 4 + 2 = 6

16. 'கீரைப்பாத்தியும் குதிரையும்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.
17. 'கெடும்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**IV. கடிதம் வரைக.** 1 × 5 = 5

18. உனது அலுவலக மேலாளருக்கு வீட்டில் இருந்து வேலை செய்ய வேண்டுதல் சார்பாக கடிதம் வரைக.

**V. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** 7 × 2 = 14

19. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?
20. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
21. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?
22. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
23. குங்குமம், கமலம் என்பன எவ்வகை வடசொற்கள்?
24. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
25. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?
26. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

**VI. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

27. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
28. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
29. 'ஆழ்கடலின் அடியில்' கதையைச் சுருக்கி எழுதுக.
30. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

**VII. நெடுவினா.** 1 × 5 = 5

31. மலர்விழியும் தமிழரசியும் பேசிய தலைப்பின் கீழ்வரும் கருத்துகளைப் பதிவு செய்க.

**VIII. 32. கட்டங்களை நிரப்புக.** 6 × 1 = 6

| வேர்ச்சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நட | | | |
| எழு | | | |
| ஓடு | | | |
| சிரி | | | |
| பிடி | | | |
| இறங்கு | | | |